# திருக்கரசைப் புராணம் - அழிந்து செல்லும் ஓர் ஆலயத்தின் ஆதாரவேடு: அகஸ்திய ஸ்தாபனத்தைப் பற்றிக் கூறும் திருக்கரசைப்புராணத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு

**N. Subaraj**

Department of Languages,
South eastern Universtiy of Sri Lanka, Oluvil, Sri Lanka

*Keywords: தலபுராணம், திருக்கரசைப்புராணம், அகஸ்திய ஸ்தாபனம்*

## அறிமுகம்

இலங்கையில் யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் தோற்றம் பெற்றதாகக் கருதப்படும் திருக்கரசைப்புராணம் ஓர் தலபுராணமாகும். திருகோணமலை மாவட்டத்தின் திருக்கரசையம்பதி எனும் இடத்தில் உள்ள "அகஸ்திய ஸ்தாபனம்" எனும் ஆலயத்தின் மீது பாடப்பட்ட புராணமே இத்திருக்கரசைப் புராணமாகும். கரசைப்புலவரால் பாடப்பட்டதாகக் கருதப்படும் இந்நூலே அகஸ்திய ஸ்தாபனத்தின் தொன்மையை வெளிப்படுத்தும் முக்கிய ஆவணமாக உள்ளது.

வரலாற்றாய்வாளர்கள் இலக்கிய ஆதாரங்களை இரண்டாம் பட்சமாகவே ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்வதுண்டு. இருப்பினும் திருக்கரசையம்பதியைப் பொறுத்தவரையில் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்ற குறிப்புகள் கிடைக்கப்பெறாமையால் திருக்கரசைப்புராணமே அகஸ்திய ஸ்தாபனத்தின் தொன்மையை புரிந்து கொள்வதற்கு தக்க சான்றாக உள்ளது.

ஈழத்துப் புராதன சிவாலயங்களுள் ஒன்றாக அடையாளங் காணப்பட வேண்டிய அகஸ்திய ஸ்தாபனம் இன்று முற்றும் முழுதாக அழியும் நிலையில் உள்ளது. இருப்பினும் இத்தலத்தின் இருப்பையும், தொன்மையையும், சிறப்பையும் என்றும் நிரூபித்து நிற்கும் இலக்கியமாக திருக்கரசைப் புராணம் உள்ளது.இவ்ஆய்வின் நோக்கங்கள்:

- அழிந்து செல்லும் தலமான அகஸ்திய ஸ்தாபனத்தின் ஒரு ஸ்திரமிகு ஆவணமாக திருக்கரசைப்புராணம் விளங்குவதை இனங்காட்டுதல்
- அகஸ்திய ஸ்தாபனத்தைப் பற்றிக் கூறும் திருக்கரசைப் புராணத்தின் சிறப்பையும், தொன்மையையும் காட்டுதல். அதனூடாக அகஸ்திய ஸ்தாபனத்தின் பழம் வரலாற்றையும், சிறப்பையும் சுட்டிக்காட்டுதல்
- ஈழத்துப் புராதன சிவாலயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் அகஸ்திய ஸ்தாபனத்தின் இன்றைய அழிவு நிலையையும், அதற்கான காரணங்களையும் எடுத்துக்காட்டுதல்

## ஆய்வு முறையியல்

யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் அகஸ்திய ஸ்தாபனத்தைப் நோக்கிப் பாடப்பட்ட திருக்கரசைப்புராணம் இவ்வாய்வின் முதனிலைத் தரவாக அமைகின்றது. கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்ற ஆவணங்கள் எதுவும் அகஸ்திய ஸ்தாபனத்தைப் பற்றி நேரடியாக எடுத்துரைக்காமையால் இலக்கியத்தரவே முதன்மைத் தரவாகக் கொள்ளப்படுகின்றது. திருக்கரசைப்புராணம் இன்று பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. பெரும்பாலும் வெவ்வேறு பட்ட அறிஞர்களின் உரைகளுடனேயே அவை வெளிவருகின்றன. அவ்வுரைகள் அனைத்தும் ஆய்வின் மூலங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மேலும் கங்குவேலி எனும் கிராமத்தில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் வயல்களை ஒரு திசையிலும், மகாவலிக் கங்கையை மறுதிசையிலும் கொண்டமைந்த ஒரு காட்டுப் பகுதியில் அமைந்துள்ள அகஸ்திய ஸ்தாபனத்தை தற்போது நிர்வகித்து வரும் கங்குவேலி சிவன்கோயில் நிர்வாகத்தினரிடமும், அக்கிராமத்து பெரியவர்களிடமும், ஆலயப் பூசகர்களிடம் மற்றும் பலரிடமும் பேட்டி காணப்பட்டு, அதன் மூலம் தரவுகள் பெறப்பட்டன. மேலும் அகஸ்திய ஸ்தாபனம் அமைந்துள்ள இடத்திற்கு நேரிற் சென்று எடுக்கப்பட்ட அதன் பழைய

சிதைவுகள், புதிதாகக் கட்டப்பட்டு பின் அழிபட்ட கட்டடங்கள், அகஸ்திய ஸ்தாபனத்தின் பழைய தீர்த்தம், மணித்தூண் போன்றவை பற்றிய தரவுகள் மற்றும் அவற்றின் புகைப்படங்கள் என்பன ஆய்வின் முதனிலைத் தரவுகளாக அமைகின்றன.

தவிர,ஈழத்து இலக்கியங்கள் மற்றும் ஈழத்து இலக்கிய வரலாறு போன்றன பற்றிய நூல்கள், அகஸ்திய ஸ்தாபனம் தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் என்பன இரண்டாம் நிலைத்தரவுகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**சுருக்கமும் முடிவும்**

ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றில் மிகப்பழமையான தலபுராணமாகக் கொள்ளப்படுவது திருக்கரசைப்புராணமாகும். இப்புராணம் இன்று திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள மல்லிகைத் தீவு சிவன் கோயில், கங்குவேலி சிவன் கோயில் ஆகிய தலங்களில் திருவிழாக்களின் போது புராணபடனம் செய்யப்படுகின்றது. ஆனால் இத்திருக்கரசைப்புராணம் சுட்டி நிற்கும் தலமான அகஸ்திய ஸ்தாபனத்தில் இப்புராணபடனம் நிகழ்த்தப்படுவதில்லை. அகஸ்திய ஸ்தாபனம் இன்று கவனிப்பாரற்று முற்று முழுதாக அழிந்து போகும் நிலையில் உள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

அகஸ்திய ஸ்தாபனத்தின் தோற்றம் குறித்து திருக்கரசைப்புராணம் தவிர்த்து வேறெந்த ஆதாரமும் இல்லை. திருக்கரசைப்புராணம் கூறும் வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்டு பார்க்கும் போது உண்மையில் அகஸ்திய ஸ்தாபனம் ஈழத்துப் புராதன சிவனாலங்களுள் ஒன்றெனத் தெரிகின்றது. அதேவேளை சிலர் இதனை ஓர் ஆலயமெனக் கூறுவதில் கூட முரண்படுகின்றனர். அகஸ்திய ஸ்தாபனம் என்ற சொல்லில் “ஸ்தாபனம்” என்பது ஒரு ஆலயத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தும் பதமாகாது என குறிப்பிடும் இவர்கள், சித்த வைத்தியத்திலே சிறந்திருந்த அகத்திய முனிவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுவதால் இதுவொரு வைத்திய கூடமாகச் செயற்பட்டிருக்கலாம் எனவும் அகத்தியர் தனது நித்திய வழிபாட்டிற்காக இலிங்கத்தை அமைத்து வழிபட்டிருக்கலாம் எனவும் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு எண்ணுவது தவறு என்பது தெளிவு.

ஏனெனில் இவ்வாலயம் அகத்தியரால் கட்டப்பட்டதாகக் கூறும் திருக்கரசைப்புராணம் எவ்விடத்திலும் அகத்தியர் அதனை ஓர் வைத்தியகூடமாகப் பயன்படுத்தினார் எனக் கூறவில்லை. உண்மையில் வைத்தியக் கருவிகளின் எச்சங்கள் இன்று அங்கு காணப்படுகின்றன. இதற்கு காரணம் வைத்தியத்திலே தேர்ச்சிபெற்றிருந்த அகத்தியர் மக்களின் நலனுக்காக சில வைத்தியச் சேவைகளை அவ்வாலயத்தில் வைத்தே புரிந்திருக்கலாம். அவற்றின் எச்சங்களாக இவை இருக்கலாம் எனக் கூறலாமே தவிர அது ஒரு வைத்தியகூடமாக இருந்திருக்க வாய்ப்பில்லை. இவ்வாறு அறுதியாகக் கூறுவதற்கு மற்றுமோர் காரணமும் உண்டு. ஒரு முழுமையான இந்து ஆலயம் அமைக்கப்பட வேண்டிய கட்டட ஒழுங்கு முறைகளுக்கேற்பவே அகஸ்திய ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளதையும், முறைப்படி பூசைகள் நடாத்தப்பட்டமையையும் திருக்கரசைப்புராணம் காட்டி நிற்கின்றது.

ஈழத்துப் பழமைமிக்க தலங்களுள் ஒன்றாக வைத்துப் போற்றப்பட வேண்டிய “அகஸ்திய ஸ்தாபனம்” இன்று அழிந்து போகும் நிலையில் உள்ளது. அதன் இருப்பை என்றும் நிறுபித்து நிற்கும் இலக்கியமாத் திருக்கரசைப்புராணம் உள்ளது. இன்று அகஸ்திய ஸ்தாபனத்தை முற்றுமுழுதாக அழிய விடாமல் ஓரளவிற்கேனும் நிர்வகித்து வருபவர்கள் கங்குவேலி சிவன் ஆலயத்து நிர்வாகத்தினரே எனக் கூறலாம். ஒரு ஸ்திரமான தலபுராணத்தைக் கொண்ட அகஸ்திய ஸ்தாபனத்தை சிறு அளவிலாவது புனருத்தாரனம் செய்து, அழியாது காத்திட வேண்டியது அவசியமாகும். பெருந்தொகை செலவிட்டு புதுப்புது ஆலயங்களை அமைப்பதை விட பாடல் பெற்றதும், பழமை வாய்ந்ததுமான இதுபோன்ற தலங்களை அழியாது காப்பது சிறந்தது.

எனவே ஒரு நேர்த்தியான தலபுராணத்தைக் கொண்ட ஒரு தலத்தை முற்று முழுதாக அழிய விடுவது குறிப்பிட்ட அச்சமூகத்தின் பொறுப்பற்ற தன்மையினையும், அலட்சியப் போக்கினையும் தெளிவாகக் காட்டி நிற்கின்றது. பெரிய அளவில் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது அவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்யலாம். நித்திய வழிபாடுகள்

இல்லாவிட்டாலும் நைமித்திய கிரியைகளையாவது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம். ஆனால் இவ்வாறான செயற்பாடுகள் எதுவும் அங்கு இடம் பெறுவதாகத் தெரியவில்லை. எவ்வாறாயினும் இத்தலத்தினை காக்காது முற்றுமுழுதாக அழியவிடினும் அதன் இருப்பை என்றும் நிரூபித்து நிற்கும் ஆவணமாகத் திருக்கரசைப்புராணம் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனையே இவ்வாய்வும் சுட்டிக்காட்டி, நிரூபிக்க முனைகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


இரகுபரன்,க. 2009. *திருக்கரசைப் புராணம்*, கொழும்பு, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

பத்மநாதன்,சி. 2004. *ஈழத்து இலக்கியமும், வரலாறும்*, சென்னை, குமாரன் புத்தக நிலையம்.

துரை மனோகரன். 1997. *இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, கலைவாணி புத்தக நிலையம்.

நந்தகுமார்,இ. 1999. *கங்குவேலி*,திருகோணமலை, கங்குவேலி சிவன் கோயில்.

வடிவேல்,சி. 1983. *திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்*, கொழும்பு. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.